செய்தி வெளியீடு எண். 236 நாள்: 01.05.2018

**மே தினத்தையொட்டி ஒதிக்காடு ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்துக்கொண்டார்.**

திருவள்ளுர் ஊராட்சி ஒன்றியம், ஒதிக்காடு ஊராட்சி ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் மே தினத்தையொட்டி நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்துக்கொண்டார். இக்கிராம சபைக் கூட்டம் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.எ.சந்தானம் (கி.ஊ) தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது -

திருவள்ளுர் மாவட்டத்திலுள்ள 526 ஊராட்சிகளில் மே தினமான தொழிலாளர் தினத்தில் கிராமசபை கூட்டம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கி.ஊ) தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் (VPDP), அந்தியோதயா இயக்கம், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல், திட்ட அறிக்கை, முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் 2018-19, ஊரக பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம், சுகாதாரம் தொடர்பாக திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகள், கழிப்பறை கட்டி பயன்படுத்தும் பயனாளிகளுக்கு பாராட்டு தெரிவித்தல், குழுக்களுக்கு ஒத்துழைப்பு, கழிப்பறை இல்லாதோர் விவரப்பட்டியல், திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள் எடுத்துரைத்தல், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், பள்ளி கழிப்பறைகள் மற்றும் அங்கன்வாடி மையக் கழிப்பறைகள், திடக்கழிவு மேலாண்மை திட்டம், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல், இதர பொருட்கள் குறித்தும் விவாதிக்கப்பட வேண்டும். மேலும், கிராமசபை கூட்டங்களுக்கு பிற துறைகளை சார்ந்த அலுவலர்களும் கலந்து கொண்டு அவர்களது துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி பணிகள் குறித்து பொது மக்களிடம் எடுத்துரைப்படும்.

இந்த கிராம சபை கூட்டத்தில் மக்கள் அதிக அளவில் பங்கேற்க்க கிராம ஊராட்சிகளில் முழுமையான அறிவிப்புகள் மற்றும் விளம்பரங்கள் செய்து சிறப்பான முறையில் கிராம சபை கூட்டத்தை நடத்திட அனைத்து ஊராட்சி ஒன்றிய தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஏற்பாடுகள் செய்துள்ளனர். கிராம சபை கூட்ட ஏற்பாடுகளை கண்காணிக்கவும், பார்வையிடவும் ஊராட்சி ஒன்றிய அளவில் உதவி இயக்குநர் நிலையில் மண்டல அலுவலர்கள் நியமிக்கிப்பட்டுள்ளனர் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் சுகாதார உறுதிமொழியை கிராம மக்கள் ஏற்றுக்கொண்டனர். பின்னர் கிராம மக்களின் கேரிக்கைகள் மற்றும் மனுக்களை பெற்றுக்கொண்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களை உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறித்தினார்.

இக்கூட்டத்தில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ஸ்ரீதர், திருவள்ளுர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.ஆர்.லதா (வ.ஊ), திரு.எ.சந்தானம் (கி.ஊ), திருவள்ளுர் வட்டாட்சியர் திரு.தமிழ்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் கிராம பொது மக்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**